**ஜூலை – 23**

# TNPSC துளிகள்

- உலக சுகாதார அமைப்பின் (World Health Organisation - WHO) முதல்நிலைத் தரவானது காங்கோவில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றின் போது பயன்படுத்தப்பட்ட மெர்க்கிஸ் தடுப்பு மருந்தானது (VSV-EBOV), எபோலா நோய்த் தொற்றைத் தடுப்பதில் 97.5% செயல்திறன் மிக்கதாக இருந்தது என்று கூறுகின்றது.
    - இந்தத் தடுப்பூசியானது எபோலா வைரஸின் புரத உறையின் ஒரு பகுதியுடன் இணைந்த "வெசிகுலர் ஸ்டோமாடிடிஸ் வைரஸ்" எனப்படும் விலங்குகளில் காணப்படும் வைரஸை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- இந்திய பாடிபில்டரான (உடற்கட்டுநர்) ரவீந்தர் குமார் மாலிக் மிஸ்டர் தெற்கு ஆசிய ஆணழகன் பட்டத்தை வென்றுள்ளார்.
    - இவர் நேபாளத்தின் காத்மாண்டுவில் நடைபெற்ற 12-வது தெற்கு ஆசிய உடற்கட்டுநர் (பாடிபில்டிங்) மற்றும் தேகக் கட்டமைப்பு விளையாட்டு சாம்பியன்ஷிப்பில் ஒட்டுமொத்த சாம்பியனாக முடிசூட்டப் பட்டார்.
- ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 22 ஆம் தேதி பை (Pi) தோராய தினம் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
    - "Pi" என்பதின் பொதுத் தோராய பின்னம் 22/7 என்று கூறப்படுகின்றது.
- வீர்மாதா ஜிஜாபாய் போஸ்லே உதயன் மற்றும் விலங்கியல் பூங்காவை புதுப்பிப்பதற்கான தனது முயற்சியின் ஒரு பகுதியாக, பிருஹன்மும்பை மாநகராட்சியானது சர்வதேச விலங்கியல் பூங்காவிலிருந்து 2 ஜோடி வரிக் குதிரைகளையும் சில அயல்நாட்டுப் பறவையினங்களையும் குஜராத்திற்குக் கொடுத்து, அதற்குப் பதிலாக 2 ஜோடி சிங்கங்களைப் பெறத் திட்டமிட்டுள்ளது.


# தேசியச் செய்திகள்

## சந்திரயான் – 2 திட்டம்

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் தேதியன்று இந்தியாவின் மிகவும் வலிமையான செயற்கைக் கோள் செலுத்து வாகனமான ஜிஎஸ்எல்வி மாக் III – எம் 1 சந்திரயான் 2 விண்வெளிக் கலனை, அதன் திட்டமிடப்பட்ட சுற்றுவட்டப் பாதைக்குள் வெற்றிகரமாகச் செலுத்தியது.
- ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையம் SHAR-ன் 2 வது ஏவு தளத்திலிருந்து இந்தச் செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது.
- சந்திரயான் – 2 திட்டம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.
    - முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சுற்று வாகனம் (ஆர்பிட்டர்)
    - லேண்டர் (விக்ரம் என்று பெயரிடப்பட்ட தரையிறங்கும் சாதனம்)
    - ரோவர் (பிரக்யான் என்று பெயரிடப்பட்ட நிலவில் ஆய்வு செய்யும் சாதனம்)
- இந்த லேண்டர் சாதனம் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 அன்று நிலவில் உள்ள மன்சீனஸ் C மற்றும் சிம்பெலியஸ் N என்ற இரண்டு பள்ளங்களுக்கிடையே ஒரு

உயரிய சமவெளிப் பகுதியில் மென்மையான தரையிறக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ லேண்டரின் ஆயுட் காலம் (ஆய்வுக் காலம்) 1 நிலவு நாள் ஆகும்.
- ❖ ஆய்வு செய்யும் சாதனம் 14 புவி நாட்களுக்குச் சமமான 1 நிலவு தினத்திற்கு நிலவின் மேற்பரப்பின்போது மீது ஆராய்ச்சியினை வெளியிட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும்.
- ❖ ஆர்பிட்டர் ஆனது ஓராண்டு காலத்திற்குத் தனது ஆய்வுப் பணியைத் தொடரும்.




## 5-வது ட்ரோனியர் விமானப் படை

- ❖ 5-வது ட்ரோனியர் விமானப் படையான, இந்தியக் கடல் விமானப் படை (INAS - Indian Naval Air Squadron) பிரிவு 313 ஆனது கடற்படைத் தளபதி கரம்பீர் சிங்கால் இந்தியக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.
- ❖ இந்த விமானப் படையானது சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து செயல்படவிருக்கின்றது.
- ❖ இந்தியக் கடற்படையில் INAS 313 இணைக்கப்பட்டதன் மூலம், எந்தவொரு கடலோர மாநிலத்திலும் இல்லாத அதிக எண்ணிக்கையிலான கடற்படை விமானத் தளங்களை தமிழ்நாடு பெறவிருக்கின்றது.
- ❖ இதர இரண்டு கடற்படை விமானத் தளங்கள் பின்வருமாறு:
    - அரக்கோணத்தில் உள்ள ஐஎன்எஸ் ராஜாளி
    - ராமநாதபுரத்தில் உள்ள ஐஎன்எஸ் பருந்து
- ❖ கடல்சார் கண்காணிப்பு, தேடுதல் & மீட்பு நடவடிக்கைகள் மற்றும் ஆயுத தளங்களுக்கு இலக்கு குறித்த தரவுகளை அளித்தல் ஆகிய பணிகளுக்கு இந்த விமானம் பயன்படுத்தப்படுகின்றது.



## இந்திய இராணுவத்தின் தலைமையகப் புதுப்பிப்பு


- இந்திய இராணுவத்தின் தலைமையகப் புதுப்பிப்பானது இந்த மாதத்தின் இறுதியில் முறையாகத் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஒட்டுமொத்தப் பயிற்சி நிகழ்வானது சிம்லாவிலிருந்து மீரட்டிற்கு மாற்றப்படவிருக்கும் இராணுவப் பயிற்சிக் கட்டளை அமைப்பின் கீழ் மாற்றப்படவிருக்கின்றது.
- தில்லியில் உள்ள ராஷ்டிரிய ரைபில்ஸ் பிரிவின் பொது இயக்குனரகம் வடக்குக் கட்டளை அமைப்பு அமைந்திருக்கும் உதம்பூருக்கு மாற்றப்படவிருக்கின்றது.
- இரண்டு புதிய கூடுதல் பொது இயக்குநர் (ADG - Additional Director-General) பதவிகள் ஏற்படுத்தப்பட விருக்கின்றன.
    - ADG, மனித வளம்
    - ADG, கண்காணிப்பு
- இந்தப் புதுப்பித்தலானது இராணுவத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மக்கள் தொகை ஈவுக் காலம்

- 2018 ஆம் ஆண்டில் மக்கள் தொகை ஈவுக் காலமான ஒரு 37 ஆண்டு காலத்திற்குள் இந்தியா நுழைந்துள்ளது என்று சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.
- அதிக எண்ணிக்கையிலான உழைக்கும் வயது கொண்ட மக்கள் தொகையானது 2055 ஆம் ஆண்டு வரை நீடிக்க இருக்கின்றது.
- ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியமானது (UN Population Fund - UNFPA), “மக்கள் தொகை ஈவுத் தொகையை” மக்கள் தொகையின் வயது அமைப்பில் நிகழும்

மாற்றங்களின் விளைவாக ஏற்படும் "திறன் வளர்ச்சி" என்று வரையறுக்கின்றது.

- 2018 ஆம் ஆண்டு முதல், உழைக்கும் வயது கொண்ட மக்கள் தொகையானது (15 வயது முதல் 64 வயது வரை உள்ள மக்கள்) சார்ந்துள்ளோரின் மக்கள் தொகையைவிட (0 முதல் 14 வயது வரை மற்றும் 65 வயதிற்கு மேல்) அதிக அளவில் வளர்ந்துள்ளது.
- ஜப்பான், சீனா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் ஏற்கெனவே இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி, அதிக அளவிலான பொருளாதாரச் செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளன.




## அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களில் எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவினரின் பிரதிநிதித்துவம்

- உயிரித் தொழில்நுட்பத் துறையால் நிதியளிக்கப்படும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களில் குறைந்த எண்ணிக்கையிலான பட்டியல் இனத்தவர் (SC - Scheduled Castes) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின (ST - Scheduled Tribes) ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர் என்பது தகவல் பெறும் உரிமை வழியான கேள்வியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த அமைப்பைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் SC க்கு 15 சதவிகிதம் மற்றும் STக்கு 7.5% என அரசாங்கம் விதித்துள்ள இடஒதுக்கீட்டை விட குறைவாகவேப் பூர்த்தி செய்கின்றன.

| | Permanent staff | | Scientists | |
|---|---|---|---|---|
| Institute | Total | SC/ST | SC | ST |
| National Institute of Animal Biotechnology | 37 | 6 | 1 | 0 |
| National Institute of Immunology | 208 | 34 | 2 | 0 |
| Regional Centre for Biotechnology | 44 | 4 | 0 | 0 |
| National Insitute of Plant Genome Research | 74 | 9 | 5 | 0 |
| Centre for DNA Fingerprinting and Diagnostics | 110 | 19 | 2 | 0 |
| National Centre for Cell Sciences | 149 | 27 | 5 | 2 |
| Centre of Innovative and Applied Bioprocessing | 13 | 2 | 1 | 0 |
| Translational Health Science and Technology Institute | 32 | 2 | 1 | 0 |
| Institute of Bioresources and Sustainable Development | 14 | 0 | 0 | 0 |

## கொலிஸ்டின் நோயெதிர்ப்பு வகை - விலங்குகள்

- உணவு உற்பத்தி செய்யும் விலங்குகள், கோழிப் பண்ணை, நீர் தொடர்பான தொழில்கள் மற்றும் விலங்குத் தீவனப் பொருட்கள் ஆகியவற்றிற்காக கொலிஸ்டின் மற்றும் அதன் கலவைகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தினைத் தடை செய்வதற்கான ஆணையை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் வழங்கியுள்ளது.
- இது கொலிஸ்டின் கொள்கலனின் மீது இந்தத் தகவலைக் காட்சிப்படுத்த வேண்டும் என்று உற்பத்தியாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.
- கொலிஸ்டின் என்பது தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் விலங்குகளைக் காப்பாற்றுவதற்காகக் கடைசி நேரத்தில் வழங்கப்படும் ஒரு நோயெதிர்ப்பு மருந்தாகும்.
- இது கிராம் - நெகட்டிவ் பேசில்லிற்கு எதிராகச் சிறப்பாகச் செயல்படுகின்றது.
- இது உணவுச் சங்கிலி வழியாக நுழையும் போது அதிகரித்து வருகின்ற நோயாளிகள் இந்த மருந்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றன.

## பாதுகாப்புக் கண்காட்சி இந்தியா – 2020

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பாதுகாப்புக் கண்காட்சியின் 11-வது பதிப்பானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முதன்முறையாக உத்தரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னோவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "இந்தியா-வளர்ந்து வரும் பாதுகாப்பு உற்பத்தி மையம்" என்பதாக இருக்கும்.
- இது பாதுகாப்புத் துறையில் உள்ள டிஜிட்டல் உருமாற்றத்தின் மீது கவனத்தைச்

செலுத்துகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்


## மெய்நிகர் நாணயங்கள் மீதான குழு

- மெய்நிகர் நாணயங்கள் மீதான அமைச்சகங்களுக்கிடையே குழுவானது, "மெய்நிகர் நாணயத்தின் தடை & அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணய ஒழுங்குமுறை மசோதா, 2019" என்பதுடன் சேர்த்து தனது அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளது.
- இது இந்தியாவின் மெய்நிகர் நாணயங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது அபராதம் விதிக்கவும் அவற்றை அதிகாரப் பூர்வமாகத் தடை செய்யவும் பரிந்துரைத்துள்ளது.
- ஆனால் இது "அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணயத்தை வெளியிடுவதை" அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.
- இது "தொடரேட்டுத் தொழில்நுட்பம்" என்று பொதுவாக அறியப்படும் விநியோகிக்கப்பட்ட - பெயரேட்டுத் தொழில்நுட்பத்தின் (DLT - distributed-ledger technology) நேர்மறைப் பகுதியை எடுத்துக் காட்டுகின்றது.
- நிதிச் சேவைகள் துறையில் DLT மிகப்பெரிய பயன்பாட்டைக் கொண்டுள்ளது. உதாரணம் - கடன் வழங்குதல் மீதான கண்காணிப்பு.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீர் மாசுப் பொருட்களை நீக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறை

- பின்வருவனவற்றை நீக்கும் ஒரு பொதுவான விவசாய விளைபொருளான "எண்டாக்ரின் சீர்குலைப்பானைப்" பயன்படுத்தும் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு முறையை ஆராய்ச்சியாளர்கள் மேம்படுத்தியுள்ளனர்.
  - மாசுப் பொருட்கள்
  - சுற்றுச்சூழல் ஹார்மோன்
- கழிவு நீரில் உள்ள சுற்றுச்சூழல் ஹார்மோன்கள் மிக எளிதில் உடையாது.
- தற்பொழுது கழிவுநீரை அப்புறப்படுத்தப் பயன்படும் வினையூக்கிகள் அதிக செலவு மற்றும் குறைந்த திறன் கொண்டவையாக உள்ளன.




- உயிரிக் கரிமப் பொருள் மற்றும் மாங்கனீசு டை ஆக்சைடு ஆகியவற்றிலிருந்துத் தயாரிக்கப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வினையூக்கிகள் குறைந்த செலவு மற்றும் அதிக திறனுடன் கழிவு நீரைச் சுத்திகரிக்க பயன்படுத்தப்பட முடியும்.
- உயிரிக் கரிமப் பொருள் (Biochar) என்பது ஒரு பொதுவான வேளாண் விளைபொருளாகும். இது கரிமக் கழிவுகளிலிருந்துத் தயாரிக்கப்படுகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## மோகுன் பாகன் ரத்னா

- இந்த மாதத்தின் 29 ஆம் தேதியன்று நடைபெறும் மோகுன் பாகன் மன்றத்தின் வருடாந்திர தினக் கொண்டாட்டத்தின் போது ஒலிம்பிக்கில் இருமுறை தங்கம் வென்றவரான கேசவ் தத் மற்றும் இந்தியாவின் முன்னாள் கால்பந்து அணித் தலைவரான பிரசூன் பானர்ஜி ஆகியோருக்கு “மோகுன் பாகன் ரத்னா” விருது வழங்கப்பட விருக்கின்றது.
- 94 வயது நிரம்பிய ஒலிம்பிக் வீரரான கேசவ் தத் 1948 ஆம் ஆண்டில் இலண்டன் விளையாட்டுப் போட்டிகளில் ஹாக்கிப் போட்டியில் இந்தியாவிற்காக விளையாடி முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றார். பின்னர் இவர் 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஹெல்சிங்கி விளையாட்டுப் போட்டிகளிலும் தங்கப் பதக்கத்தை வென்றார்.

***இதுபற்றி***

- மோகுன் பாகன் தடகள மன்றம் என்பது இந்தியாவின் மேற்கு வங்கத்தில் உள்ள ஒரு தொழில்சார் கால்பந்துக் கூட்டமைப்பு மன்றமாகும்.
- 1884 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று பூபேந்திரநாத் போஸ் என்பவரால் உருவாக்கப்பட்ட இது இந்தியாவில் தற்பொழுதுள்ள மிகப் பழமையான கால்பந்து கூட்டமைப்பு மன்றமாகும்.
- இது 1911 ஆம் ஆண்டில் IFA ஷீல்டு இறுதிப் போட்டியில் இங்கிலாந்து கால்பந்து அணியான “கிழக்கு யார்க்சைர் படைப் பிரிவிற்கு” எதிராக விளையாடி வெற்றி பெற்ற முதலாவது இந்தியக் கால்பந்து மன்றமாகும்.

# முக்கிய தினங்கள்

## தேசிய ஒளிபரப்பு தினம் – ஜூலை 23

- ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 23 அன்று இந்தியாவில் தேசிய ஒளிபரப்பு தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- 1927 ஆம் ஆண்டு ஜூலை 23 அன்று நாட்டின் முதலாவது வானொலி ஒளிபரப்பு இந்திய ஒளிபரப்பு நிறுவனம் என்ற ஒரு தனியார் நிறுவனத்தினால் மும்பையிலிருந்து ஒளிபரப்பப் பட்டது.
- 1936 ஆம் ஆண்டு ஜூன் 08 அன்று இந்திய அரசு ஒளிபரப்புச் சேவையானது அனைத்து இந்திய வானொலியாக (All India Radio – AIR) மாறியது.
- AIR-ன் குறிக்கோள் “பகுஜன் ஹிட்டாயா பகுஜன் சுக்காயா” என்பதாகும்.

- - - - - - - - - - - - - - -